Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.STC. 554/2023 PW-1**

Name : பாலாஜி
Father / Husband name : ராமன்
Village : திண்டிவனம்
Age : 51
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 19.08.2025

Complainant present. Accused absent. Petition u/s 317 CrPC filed and allowed. Both side counsel present.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிதரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

எனது வீடு TRS.பிரபு வீட்டிற்கு எத்தனை வீடு தள்ளி உள்ளது என்றால் 4 வீடு தள்ளி உள்ளது. அவரின் வீட்டில் தான் ஸ்ரீசண்முகி சிட்பன்ட் பிரைவேட் லிமிடு நடத்திவருகிறார் என்றால் தெரியாது. நான் மார்கெட்டிற்கு வரவேண்டும்யென்றால் TRS.பிரபு வீட்டை தாண்டி வரவேண்டும் என்றால் சரியல்ல. வழக்கின் எதிரியிடம் நான் போனில் இதுவரைபேசியது இல்லை என்றால் சரிதான். அதனால் எதிரியின் போன் நெம்பர் தெரியாது என்றால் சரியல்ல. எதிரியின் போன் நெம்பர் என்ன என்றால் தற்போது நினைவில்லை. எனக்கு எதிரியின் போன் நெம்பர் தெரியாது, வழக்கிற்காக நினைவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எத்தனை போன் நெம்பர் வைத்துள்ளேன் என்றால் இரண்டு. அதன் எண் என்றால் 9941255476, 9790709470 ஆகும்.

2. மேற்படி எந்த செல்போனிலிருந்து TRS.பிரபுவிடம் பேசுவேன் என்றால் நான் போனில் பேசமாட்டேன். TRS.பிரபு எத்தனை போன் நெம்பர் வைத்துள்ளார் என்றால் தெரியாது. எதிரியின் வீட்டு எண் என்ன என்றால் 32, சக்திநகர். போனவாய்தாவிற்கு பிறகு TRS.பிரபுவை பார்த்தேனா, போனில் பேசினேனா

என்றால் இல்லை. நான் வட்டி தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. நான் யாருக்கும் வட்டிக்கு பணம் கொடுத்தது இல்லை என்றால் சரிதான். வழக்கின் காசோலையை வங்கியில் செலுத்திய கவுன்டர் ரசீது உள்ளதா என்றால் வழக்கறிஞரிடம் உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாரா என்றால் தயார். வழக்கின் காசோலை வங்கியின் எந்த தேதியில் செலுத்தப்பட்டது என்றால் 12.10.2023.

3. இந்த வழக்கின் எதிரி TRS.பிரபுவின் சீட் நிறுவனத்தில் சீட்டு சேர்ந்தபோது பாதுகாப்புக்காக கொடுத்த இரண்டு காசோலைகளை பூர்த்தி செய்யாமல் கொடுத்ததை நானும் TRS.பிரபுவும் முறைகேடு செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் காசோலை எதிரியால் கொடுக்கப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கின் காசோலையை எதிரி பூர்த்தி செய்யவில்லை என்றால் தெரியாது, பூர்த்தி செய்யப்பட்ட காசோலையில் எதிரி என்முன்பாக கையொப்பம் மட்டும் செய்துகொடுத்தார். காசோலையை என்னிடம் பூர்த்தி செய்யவில்லை, கையொப்பமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு என்னை யார் என்று தெரியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சட்டப்படியாக தாக்கல் செய்த வழக்கு இல்லை என்றால் சரியல்ல. எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுவிக்கவேண்டும் என்றர் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

Sd/ M.Elavarasi,

Judicial Magistrate No.1, Tindivanam